துவங்க இருக்கிறது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை எடப்பாடி பகுதி மக்களுக்காக அம்மா அரசு செய்து கொடுத்துள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு முதலமைச்சர் .எடப்பாடி பழனிசாமி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் வி.பன்னீர்செல்வம், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர். சுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் செ.செம்மலை, ஜி.வெங்கடாசலம், ஏ.பி.சக்திவேல், பி.மனோண்மணி, எஸ்.ராஜா, எஸ்.வெற்றிவேல், ஆர். எம்.சின்னதம்பி, அ.மருதமுத்து, கு.சித்ரா, மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர் ஆர்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆதி விளையாட்டு அகாடமி சார்பில் பி.டி. உஷா மாநில அளவிலான தடகள போட்டி சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கு பெற்றனர். இப்போட்டியில் பருத்திப்பட்டு வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவிகள் சகானா, கனிஷ்கா, கிருத்திகா ஆகிய மாணவிகள் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்றனர். பள்ளியின் தாளாளர் எம்.வி.எம். வேல்மோகன், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டினர்.

## பெயர் மாற்றம்

Kandharaj Jayagandhan, தந்தை பெயர்: G.Jayagandhan, பிறந்த தேதி: 23.04.1998, எண்.13/7, திருமுடி விநாயகர் கோவில் தெரு, திருவான்மியூர், சென்னை–600 041, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Kantharaj Jayagandhan,** என்று அழைக்கப்படுகிறேன்.

**Kandharaj Jayagandhan**

## பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்

L32200TN1994PLCO26958

பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7/48, அண்ணா சாலை,சென்னை–600 002. Tel: (91) - 7042292838,

Email: info@aurumsoftsystems.com, Website: www.aurumsoftsystems.com

### அறிவிப்பு

**குறிப்பு: கம்பெனியின் பெயரை மாற்றுதல்**

தமிழ்நாடு, சென்னை கம்பெனிகள் பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்ட பெயர் மாற்றத்தின்படி புதிய இணைத்தல் சான்றிதழ்படி ஜனவரி 30, 2018 முதல் கம்பெனியின் பெயர் அரும் சாப்ட் சிஸ்டம்ஸ் லிமிடெட் என்பதிலிருந்து பைவ் கோர் எக்ஸிம் லிமிடெட்டாக மாற்றப்பட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கம்பெனியின் சமபங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சான பிஎஸ்இ லிமிடெட்டிற்கு மேற்சொன்ன பெயர் மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர் மாற்றத்தை ஸ்டாக் எக்சேஞ் குறிப்பில் கொண்டுள்ளது. பிப்ரவரி 14, 2018 புதிய பெயர் நடைமுறைக்கு வருகிறது. பிஎஸ்இ–யில் உள்ள கம்பெனியின் பங்கு குறியீடு 530885 என்பதிலிருந்து பைவ்கோர் என்று மாற்றப்படுகிறது.

கம்பெனியின் பெயர் மாற்றம் கம்பெனியின் சட்ட அந்தஸ்து அல்லது அமைப்பை மாற்றாது அல்லது கம்பெனியின் பொறுப்பு அல்லது உரிமைகளை பாதிக்காது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
ஒப்பம்
சுரிந்தர் கவுர் கல்ரா
நிர்வாக இயக்குனர்

தேதி: பிப்ரவரி 16, 2018
இடம்: சென்னை

## பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிப்பது என்ன வென்றால், ஒரு அரசியல் கட்சி **அப்துல்கலாம் லட்சிய இந்தியா கட்சி**, என்ற பெயரில் பதிவாக உள்ளது. மேற்படி கட்சியின் அலுவலகம் எண்.48, முடிச்சூர் மெயின் ரோடு, முடிச்சூர், சென்னை–600 078 என்ற முகவரியில் உள்ளது. இந்த கட்சி மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 29Aல் அரசியல் கட்சியாக பதிவு செய்ய கோரி இந்திய தேர்தல் ஆணையம், புதுடெல்லி மனுதாக்கல் செய்துள்ளேன். கட்சியின் நிர்வாகிகள் பின் வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| **தலைவர்** | : **திரு.எம்.பரமாத்மா** |
| **பொதுச் செயலாளர்** | : **திரு.எஸ்.குமார்** |
| **பொருளாளர்** | : **திரு.எஸ். விஜயன்** |

**அப்துல்கலாம் லட்சிய இந்தியா கட்சியை** பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் அதற்குரிய காரணங்களுடன் செயலாளர், இந்திய **தேர்தல் ஆணையம் நிர்வஞ்சன் சதன் அசோகா ரோடு, புதுடெல்லி–110001** என்ற முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.

## பொது அறிவிப்பு

சென்னை- 600 040, அண்ணாநகர், 17வது தெரு, Q Block, பழைய கதவு எண்.24 புதிய எண்.2-ல் வசிக்கும் திரு.சேஷைய்யா அவர்களின் குமாரர் திரு. S. ஜெயச்சந்திரன் ஆகிய நான் எனக்கு சொந்தமான வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் உப-பதிவு மாவட்டம், பெரம்பூர் தாலூக்கா, செம்பியம் கிராமம், சர்வே எண்.31 பார்ட், ஆர்.எஸ்.நெ. 31/3D, L.L.No. 1078/1987, T.S.No.99, Block No.8, சென்னை- 600 011, பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, கதவு எண்.73-ல் அமைந்துள்ள சுமார் 3035சதுரடிக் கொண்ட காலி மனைக்குண்டான என் பெயருக்கு கிரையம் பெற்ற திரு.முகமது காசிம் அவர்களின் குமாரர் திரு. ஜாவித் அகமத் அவர்களின் பொது அதிகாரி திரு.T.ராமநாயுடு அவர்களின் குமாரர் திரு.T.பாபு அவர்கள் கிரையம் செய்து கொடுத்த இரண்டு அசல் ஆவணங்கள் செம்பியம் சார்பதிவகத்தில் பதிவு செய்து பத்திர பதிவு எண 3105/1996 மற்றும் 4475/1996 என் வீட்டிலிருந்து நகல் எடுப்பதற்காக அண்ணாநகரில் உள்ள நகலக கடைக்கு செல்லும் போது தொலைந்து விட்டது. அந்த இரண்டு அசல் ஆவணங்களை எவரேனும் கண்டெடுத்தாலோ, அல்லது எவரிடமாவது இருந்தாலோ இந்த அறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் அதை எனது கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

S. ஜெயச்சந்திரன்
பழைய நெ. 24, பதிய நெ. 2, Q Block 17வது தெரு,
அண்ணாநகர், சென்னை- 600 040.

## படிவம் எண். INC-26

**(கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி)**

தென் பிராந்தியம், மத்திய அரசு முன்னால்

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13 (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30 (5) (ஏ)ன் விஷயத்தில்

மற்றும்

வின்எவர் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்,
பதிவு அலுவலகம் : எண்.1,
4வது மாடி, பார்க் வியூ, எண்.85,
ஜி.என். செட்டி சாலை, தி. நகர், சென்னை 600 017

மனுதாரர்

07 பிப்ரவரி 2018 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை "தமிழ்நாடு மாநிலத்திலிருந்து" "மகாராஷ்டிரா மாநிலத்து"க்கு மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன்கீழ் பிராந்திய இயக்குனர் தென்பிராந்தியம், சென்னை அவர்களுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை அபிடவிட்டுடன் இணைத்து எம்சிஏ–21 போர்டல் (www.mca.gov.in)க்கு முதலீட்டாளர் புகார் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பலாம் அல்லது பிராந்திய இயக்குனர், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை 600 006 அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான 14 நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் உள்ள மனுதாரர் கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

குழு சார்பாக
பவானி சங்கர் மோனிகா
இயக்குனர்
(DIN 00020644)

தேதி : 19.02.2018
இடம்: சென்னை

பதிவு அலுவலகம் : எண். 1, 4வது மாடி, பார்க் வியூ, எண். 85, ஜி.என். செட்டி சாலை, தி. நகர், சென்னை – 600 017.